# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

செயலாக்க வரவு செலவு திட்டம்

**2007 – 2008**

மானியக் கோரிக்கை எண் **42**

©

தமிழ்நாடு அரசு

**2008**

# செயலாக்க வரவு செலவு திட்டம் 2007–08

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அட்டவணை


| இயல் | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நிதி ஒதுக்கீடு விவரங்கள் | 4 |
| 3. | மாநிலத் திட்டங்கள் | 17 |
| 4. | மத்திய அரசுத் திட்டங்கள் | 22 |
| 5. | மனித வள மேம்பாடு | 29 |
| 6. | ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மானியம் மற்றும் வருவாய் | 30 |
| 7. | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | 36 |
| 8. | வாழ்ந்து காட்டுவோம் திட்டம் | 43 |
| 9. | சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் | 47 |

# செயலாக்க வரவு செலவுத் திட்டம்– 2007–08

## இயல் – 1

### 1. முன்னுரை

இந்தியாவின் ஏழை மக்களில் பெரும்பான்மையானோர் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்தியாவைப் போல, தமிழ்நாட்டின் வளமும் கிராமப்புறங்களின் வளர்ச்சியையே சார்ந்துள்ளது. 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் ஊரக மக்கள் தொகை 3.62 கோடியாக தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 58 விழுக்காடு என இருந்தது. அரியலூர் (88.6%), விழுப்புரம் (85.5%), தர்மபுரி (84.9%), புதுக்கோட்டை(84.6%), கிருஷ்ணகிரி (84.3%), பெரம்பலூர் (83.9%), திருவண்ணாமலை (82.1%), திருவாரூர்(79.8%), மற்றும் நாகப்பட்டினம் (77.8%), ஆகிய மாவட்டங்கள் பெரும்பாலும் ஊரகத் தன்மையைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில், கன்னியாகுமரி (34.6%), கோயம்புத்தூர் (38.3%), நீலகிரி(41.8%), தேனி (45.9%), மற்றும் மதுரை (48.3%), ஆகிய மாவட்டங்கள் நகரத் தன்மையைக் கொண்டுள்ளதோடு, அவைகளின் மக்கள் தொகையில் 50 சதவீதத்துக்கும் குறைவான மக்களே ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

வறுமை ஒழிப்புத் திட்டம், வேலைவாய்ப்பினை உருவாக்குதல் சுற்றுப்புற சுகாதாரம் ஆளுமைதிறனை அதிகரித்தல், மகளிருக்கு சமூக மற்றம் பொருளாதார உரிமை வழங்குதல், சுனாமி மறுவாழ்வு போன்றவை தவிர ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளுடன் கூடிய சேவை ஆகியவற்றை, மத்திய, மாநில அரசுகள் மற்றும் இதர வெளி உதவி நிறுவனங்கள் உதவியுடன் நிறைவேற்றும் பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்ததாகும். பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை தன்னாட்சிப் பெற்ற உள்ளாட்சி நிறுவனங்களாக சீரிய முறையில் செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிககளை உள்ளடக்கிய 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் ஆகியன இத்துறையில் உள்ளடங்கியமையாகும்.

## 2. துறையின் நிர்வாக அமைப்பு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அரசு அளவில் கொள்கை முடிவு எடுப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் உறுதுணையாக இருக்கிறார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மற்றும் அதன் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சுனாமி திட்ட செயலாக்க அலகு ஆகியன இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன

மாவட்ட அளவில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே ஊராட்சிகளின் ஆய்வாளர் ஆவார். அவரே, தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்து அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவராகவும் இருக்கிறார். மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் திட்ட அலுவலர்/கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதுணையாக இருக்கிறார். ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும் பொறியியல் பிரிவு செயற் பொறியாளரை தலைமையாகக் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சிக்காக தனியே ஒரு நிர்வாகப் பிரிவு உள்ளது. அது உதவி இயக்குநர் நிலையில் உள்ள செயலர் தலைமையில் செயல்படுகிறது. அவரே மாவட்ட திட்டக் குழுவிற்கும் பதவி வழி செயலராக செயல்படுவார். ஊராட்சி நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோர் இருக்கிறார்கள்.

வட்டார அளவில், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகிய இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளனர். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஊராட்சி ஒன்றிய ஆணையராகவும் செயல்படுகிறார். வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திட்டப் பணிகளுக்கும், கிராம ஊராட்சிகளின் செயல்பாட்டிற்கும் பொறுப்பாவார். ஒவ்வொரு வட்டார ஊராட்சியிலும், ஒரு ஒன்றியப் பொறியாளர் மற்றும் ஒரு உதவிப் பொறியாளர் இருப்பார்கள். இவர்களுக்கு உறுதுணையாக பணி மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பார். இவர்களே திட்ட செயல்பாட்டில் தொழில் நுட்ப ரீதியானவற்றிற்கு பொறுப்பாவார். இந்த வட்டார அளவிலான பொறியாளர்களை உதவி செயற்பொறியாளர் மேற்பார்வை செய்வார்.

கிராம ஊராட்சி அளவில், கிராம ஊராட்சித் தலைவரே செயல் அலுவலராக இருப்பார். ஊராட்சி எழுத்தர்/உதவியாளர், ஊராட்சியின் பதிவேடுகளை பராமரிப்பதில் கிராம ஊராட்சித் தலைவருக்கு உறுதுணையாக இருப்பார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக மறைமலைநகரில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனமும், சத்திய விஜய நகரம், கிருட்டிணகிரி, பட்டுக்கோட்டை, பவானிசாகர் மற்றும் தே.கல்லுப்பட்டி ஆகிய 5 இடங்களில உள்ள மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களும் செயல்படுகின்றன. மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களின் நிர்வாகம் ஊரக வளர்ச்சி ஆணையர் (பயிற்சி) பொறுப்பில் உள்ளது.

## இயல்– 2

## நிதி ஒதுக்கீடு

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான கோரிக்கை எண். 42–ன் கீழ் நிதி ஒதுக்கீடு.

### திட்டத்தில் சேராதவை

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | கணக்குத் தலைப்புகளின் கீழ் உள்ள திட்டத்தின் பெயர் | கணக்குகள் 2006–07 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2007–08 | திருத்திய மதிப்பீடு 2007–08 | வரவு செலவு 2008–09 |
|---|---|---|---|---|---|
| 1 | சத்துணவு திட்ட மையங்கள் –கட்டிடங்கள் | 86,98 | 1,00,00 | 1,00,00 | 1,00,00 |
| 2 | ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மான்யங்கள் | 22 | 29 | 29 | 29 |
| 3 | ஊராட்சி மன்றங்களின் மகப்பேறு நிலையங்களுக்கு பராமரிப்பு மான்யம் | 86,06 | 94,28 | 94,28 | 94,28 |
| 4 | உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கு பராமரிப்பு மான்யம் | 7,02 | 6,94 | 6,94 | 6,94 |
| 5 | கைபம்புகளையும், மின்சார பம்புகளையும் பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியுதவி | 2,66,62 | 3,80,42 | 2,99,16 | 3,71,63 |
| 6 | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் நலனுக்கான திட்டத்தை செயல்படுத்த விரிவாக்க அதிகாரிகள் (ஆதி திராவிடர் நலம்.) – வட்டார ஊராட்சிகள். | 5,78,17 | 3,85,02 | 3,35,44 | 10,88 |
| 7 | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் நலனுக்கான திட்டத்தை செயல்படுத்த விரிவாக்க அதிகாரிகள் (ஆதி திராவிடர் நலம்)– கிராம ஊராட்சிகள். | 0 | 3,85,01 | 3,35,45 | 7,12,47 |
| 8 | சமுதாய நல மையங்களை பராமரித்தல். | 2,43 | 1,54 | 123 | 22 |
| 9 | ஊரக வளர்ச்சி இயக்ககம் | 5,21,97 | 13,46,34 | 11,73,68 | 4,85,00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம் | 55,55 | 1,56,69 | 85,56 | 1,10,90 |
| 11 | மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் வளர்ச்சிப் பணியாளர்கள். | 10,62,24 | 12,87,07 | 9,77,93 | 13,44,16 |
| 12 | உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் உதவி இயக்குநர் (துணிக்கை) குறித்த பணியாளர்கள் அமைப்பு | 10,76,37 | 15,64,53 | 11,68,27 | 15,51,89 |
| 13 | வட்டார தலைமையிடங்கள்– வட்டார ஊராட்சிகள் | 1,00,70,51 | 67,47,84 | 59,17,34 | 73,36,78 |
| 14 | தொலைக்காட்சிப் பெட்டி பராமரிப்பு பிரிவு | 1,66,24 | 2,48,77 | 1,69,49 | 2,16,18 |
| 15 | கொடை கிராமங்களில் ஆய்வு | 1971 | 0 | 0 | 0 |
| 16 | வட்டார தலைமையிடங்கள்.– கிராம ஊராட்சிகள் | 0 | 67,47,83 | 59,16,39 | 73,36,69 |
| 17 | ஊரக பயிற்சி விரிவாக்க மையங்கள் | 63,40 | 3,84,16 | 3,23,75 | 2,98,62 |
| 18 | மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் | 0 | 72,12 | 69,73 | 88,48 |
| 19 | ஊரக குடிசைவாழ் மக்களின் சார்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை கொடுத்தல் | 15,99,90 | 16,00,00 | 16,00,00 | 16,00,00 |
| 20 | படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் நலப் பணியாளர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் | 9736 | 15,14,16 | 15,26,90 | 15,26,90 |
| 21 | மாவட்ட ஊரக வளர்ச்சி நிர்வாகச் செலவு. | 0 | 4,04,89 | 4,93,98 | 5,51,11 |
| 22 | சமுதாய நல வளர்ச்சி திட்டத்திற்கான நிர்வாக தகவல் சேகரிப்பு பிரிவு | 14,99 | 32,18 | 20,27 | 24,42 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | சமுதாய நல வளர்ச்சி தேசிய விரிவாக்க பணி பகுதிகளுக்காக தலைமையிடத்தில் புள்ளி விபர பணியாளர்கள். | 3,33 | 6,02 | 24,80 | 30,44 |
| 24 | வறட்சியின் காரணமாக உள்ளூர் தீர்வை–உள்ளூர் தீர்வை மேல்வரிக்கு பதிலாக இழப்பீடு அளித்தல் | 0 | 1 | 1 | 1 |
| 25 | மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி மாவட்ட ஊராட்சிக்கு மான்யங்கள் ஊரக வளர்ச்சி இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ளவை | 85,24,35 | 127,08,70 | 126,68,69 | 129,19,48 |
| 26 | மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி ஊராட்சி மன்றங்களுக்கு மான்யங்கள்– ஊரக வளர்ச்சி இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ளவை | 512,56,30 | 503,34,79 | 506,74,79 | 516,77,91 |
| 27 | மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சி ஒன்றியங்களுக்கு மான்யங்கள்– ஊரக வளர்ச்சி இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ளவை | 626,95,57 | 873,72,29 | 870,97,29 | 888,21,40 |
| 28 | ஊரக உள்ளாட்சி அமைப்பு களுக்குரிய அடிப்படை கட்டமைப்பு தேவைகளை செய்து கொடுப்பதற்கான நிதி | 0 | 79,42,93 | 79,17,94 | 80,74,67 |
| 29 | உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 0 | 1 | 1 | 1 |
| 30 | கிராம ஊராட்சிகளுக்கு உதவி – மின்சாரம் கிராம ஊராட்சிகளுக்கு மின்கட்டண குறைப்பு | 0 | 0 | 38,16,00 | 38,16,00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 | ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீட்டு வருவாயை உலகளாவிய பங்கீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்தல்– நில வருவாய் | 0 | 0 | 25,46,00 | 28,01,00 |
| 32 | ஊரக பகுதிகளில் முன்னுரிமை திட்ட நிதிக்கு ஊரக உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக பங்களிப்பு தொகை– நில வருவாய். | 0 | 0 | 12,73,00 | 14,00,00 |
| 33 | ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீட்டு வருவாயை உலகளாவிய பங்கீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்தல்– முத்திரை தீர்வை | 0 | 0 | 152,87,00 | 168,15,00 |
| 34 | ஊரக பகுதிகளில் முன்னுரிமை திட்ட நிதிக்கு ஊரக உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக பங்களிப்பு தொகை– முத்திரை தீர்வை. | 0 | 0 | 76,44,00 | 84,09,00 |
| 35 | ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீட்டு வருவாயை உலகளாவிய பங்கீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்தல்– கேளிக்கை வரி. | 0 | 0 | 1,67,00 | 1,84,00 |
| 36 | ஊரக பகுதிகளில் முன்னுரிமை திட்ட நிதிக்கு ஊரக உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக பங்களிப்பு தொகை– கேளிக்கை வரி | 0 | 0 | 83,00 | 91,00 |
| | | **1382,55,29** | **1818,24,83** | **2098,15,61** | **2188,07,76** |

மாநில அரசுத் திட்டங்கள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | கணக்குத் தலைப்புகளின் கீழ் உள்ள திட்டத்தின் பெயர் | கணக்குகள் 2006–07 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2007–08 | திருத்திய மதிப்பீடு 2007–08 | வரவு செலவு 2008–09 |
|---|---|---|---|---|---|
| 1 | முழுமையான துப்புரவு இயக்கம் | 36,74,09 | 20,12,41 | 20,06,86 | 20,06,55 |
| 2 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினக்கு கான்கிரீட் வீடு கட்டும் திட்டம். | 35,89,20 | 35,892,0 | 49,33,68 | 82,22,80 |
| 3 | ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடுகள் கட்டுவதற்கான திட்டம். | 23,92,80 | 239,2,80 | 32,89,08 | 54,81,80 |
| 4 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் | 16,38,12 | 16,00,00 | 16,00,00 | 61,95,61 |
| 5 | மகளிருக்காக மனமகிழ் மன்றங்களை ஏற்படுத்துதல். | 0 | 1 | 1 | 1 |
| 6 | மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம். | 88,00 | 88,00 | 88,00 | 0 |
| 7 | வாழ்க்கைத் தொழில் மற்றும் செயல்திறன் பயிற்சி திட்டத்திற்கு நிதி உதவி | 3,50,00 | 3,50,00 | 3,50,00 | 5,00,00 |
| 8 | சுய உதவி குழுக்களை அமைப்பதற்கான நிதி உதவி | 87,50 | 87,50 | 87,50 | 87,50 |
| 9 | சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் | 13,60,83 | 15,00,00 | 15,00,00 | 15,00,00 |
| 10 | உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு அதிகார பகிர்வு மற்றும் வறுமை தணிப்புத் திட்டம்– ஜப்பான் சமூக வளர்ச்சி நிதி. | 1,15,23 | 84,79 | 1 | 1 |
| 11 | உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு அதிகாரப் பகிர்வு மற்றும் வறுமை தணிப்புத் திட்டம்– கோட்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு வளர்ச்சி | 0 | 1 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு அதிகார பகிர்வு மற்றும் வறுமை தணிப்புத் திட்டம் | 43,70,00 | 132,00,00 | 132,00,00 | 114,22,00 |
| 13 | இளைஞர்களுக்கான சுயஉதவி குழுக்களுக்கு உதவி | 8,00,40 | 8,00,00 | 8,00,00 | 11,19,75 |
| 14 | சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம். | 4,00,00 | 4,00,00 | 4,00,00 | 15,40,00 |
| 15 | சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் சுய உதவி குழுக்களுக்கு பயிற்சி அளித்தல். | 4,99,92 | 5,00,00 | 5,00,00 | 5,00,00 |
| 16 | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான சுய உதவி குழுக்களுக்கு உதவி | 1,62,50 | 2,00,00 | 2,00,00 | 3,73,25 |
| 17 | ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலை வாய்ப்புத் திட்டம்– வட்டார ஊராட்சிகள். | 26,54,28 | 24,26,10 | 36,78,34 | 27,62,12 |
| 18 | ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலை வாய்ப்புத் திட்டம்– கிராம ஊராட்சிகள். | 0 | 7,48,57 | 9,48,01 | 15,41,47 |
| 19 | ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலை வாய்ப்புத் திட்டம்– சிறப்புக் கூறுகள் திட்டம். | 1,84,20 | 1,84,20 | 2,13,95 | 2,13,95 |
| 20 | சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்– வட்டார ஊராட்சிகள். | 100,87,07 | 86,76,11 | 112,43,45 | 37,19,92 |
| 21 | இந்திரா வீட்டு வசதி திட்டம் | 12,46,26 | 12,46,26 | 17,30,88 | 26,43,14 |
| 22 | வசிக்க இயலாத கச்சா வீடுகளை இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மேம்படுத்துதல். | 1,38,47 | 1,38,47 | 1,92,32 | 2,93,68 |
| 23 | சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் இந்திரா வீட்டுவசதித் திட்டம் | 18,69,38 | 18,69,38 | 25,96,32 | 39,64,70 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | வசிக்க இயலாத கச்சா வீடகளை இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் மேம்படுத்துதல். | 2,07,71 | 2,07,71 | 2,88,48 | 4,40,52 |
| 25 | தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டம் | 26,29,98 | 70,40,00 | 148,08,00 | 292,00,00 |
| 26 | ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் ஸ்வர்ண ஜெயந்தி வேலை வாய்ப்பு கண்காணிப்பு பிரிவு | 5,09 | 3,18 | 7,05 | 6,53 |
| 27 | மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் | 68,77 | 0 | 0 | 0 |
| 28 | தர்மபுரி மாவட்டத்தில் விரிவான மேம்பாட்டிற்கான திட்டம். | 7,00,00 | 7,00,00 | 7,00,00 | 7,00,00 |
| 29 | உத்தமர் காந்தி ஊராட்சி விருது | 75,00 | 75,00 | 78,00 | 78,00 |
| 30 | வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கான திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளிலுள்ள குடிசைகளுக்கு மின்வசதி அளித்தல். | 0 | 1 | 1 | 0 |
| 31 | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முழுமையான மேம்பாட்டிற்கான திட்டம். | 50,00 | 50,00 | 50,00 | 50,00 |
| 32 | சுனாமி அவசா கால உதவி திட்டத்தின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய திட்டம். ஊரக வளர்ச்சி வாழ்வாதார திட்டம். | 173,50,00 | 31,09,50 | 31,09,50 | 2 |
| 33 | சுனாமி அவசா கால உதவி திட்டத்தின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய திட்டம். திட்ட மேலாண்மை அலகு–ஊரக வளர்ச்சி. | 4,33,49 | 5,21,43 | 8,35,67 | 8,07,57 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | வகைப்படுத்தப்படாத, ஏனைய வகைப்படுத்தப்படாத சாலைகளை பராமரிப்பதற்கு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி உதவி | 27,51 | 1 | 1 | 1 |
| 35 | கல்ராயன் மலைப் பகுதிக்காக பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல். | 26,71 | 35,50 | 39,02 | 38,22 |
| 36 | ஜவ்வாது, ஏலகிரி மலைப்பகுதி களுக்காக பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல். | 26,95 | 45,62 | 27,24 | 32,89 |
| 37 | மாவட்ட ஊரக வளர்ச்சி நிர்வாக செலவு | 7,01,40 | 0 | 0 | 0 |
| 38 | கிராம நிர்வாக அலுவலகம் கட்டுவதற்காக மான்யம். | 1,01 | 0 | 0 | 0 |
| 39 | வளர்ச்சி வட்டார நிர்வாகத்தை வலுப்படுத்துதல்,வறுமை ஒழிப்பு திட்டத்தை செயல்படுத்துதல்— வட்டார ஊராட்சிகள். | 4,29,84 | 4,12,08 | 5,19,39 | 25,34 |
| 40 | தகவல் கல்வி— தகவல் தொடர்பு திட்டத்தை செயல்படுத்துதல் | 0 | 1 | 1 | 0 |
| 41 | அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான விருப்ப மான்யங்கள். | 48,04,04 | 0 | 40,83 | 0 |
| 42 | பிற்படுத்தப்பட்ட பகுதி மான்ய நிதியின் கீழ் திட்டங்களை செயல்படுத்துதல். | 0 | 84,93,00 | 60,00 | 84,93,00 |
| 43 | வளர்ச்சி வட்டார நிர்வாகத்தை வலுப்படுத்துதல்,வறுமை ஒழிப்பு திட்டத்தை செயல்படுத்துதல்— கிராம ஊராட்சிகள். | 0 | 4,12,09 | 5,19,40 | 8,55,73 |
| 44 | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி ஆணையத்தின் சுனாமிக்கு பிந்தைய வாழ்வாதார திட்டம் | 0 | 10,00,00 | 10,00,00 | 54,37,20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45 | மாநில திட்ட வல்லுநர் குழு | 0 | 1,73,70 | 1,81,13 | 1,75,65 |
| 46 | பனிரெண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி ஊராட்சி மன்றங்களுக்கு மான்யங்கள் | 17,40,00 | 34,80,00 | 0 | 0 |
| 47 | பனிரெண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சி மன்றங்களுக்கு மான்யங்கள் | 156,60,00 | 139,20,00 | 174,00,00 | 174,00,00 |
| 48 | ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் நிவாரணப் பணிகள் –ஊரக வளர்ச்சி. | 3,86,00 | 0 | 0 | 0 |
| 49 | உலக வங்கி உதவியுடன் கூடிய அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் நிவாரணப் பணிகள் – ஊரக வளர்ச்சி வீட்டு வசதி சிறப்பு கூறுகள் திட்டம். | 8,39,10 | 2,00 | 2,00 | 2 |
| 50 | உலக வங்கி உதவியுடன் கூடிய அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் நிவாரணப் பணிகள் – ஊரக வளர்ச்சி வீட்டு வசதி. | 64,20,98 | 18,01 | 1,09,01 | 1,00,02 |
| 51 | மாவட்ட ஊரக வளர்ச்சி மைய திட்ட அலுவலகம் (கணக்குகள்) கட்டிடம் கட்டுதல். | 1,16,13 | 1,34,00 | 1,34,00 | 1 |
| 52 | ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் நிவாரணப் பணிகள் –ஊரக வளர்ச்சி.– சாலைகள் | 67,00,00 | 6,16 | 16,63,16 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 53 | ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் நிவாரணப் பணிகள் –ஊரக வளர்ச்சி.–கட்டிடங்கள் | 21,00,00 | 1,19,00 | 1,19,00 | 0 |
| 54 | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். | 82,00,00 | 92,36,00 | 94,45,57 | 94,45,57 |
| 55 | சிறப்பு கூறுகள் திட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல். | 56,40,00 | 564,0,00 | 56,40,00 | 56,40,00 |
| 56 | பிரதம மந்திரியின் கிராமக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை செயல் படுத்துதல். | 0 | 1,00 | 1,00 | 1,00 |
| 57 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல். | 225,60,00 | 2256,0,00 | 225,60,00 | 2256,0,00 |
| 58 | கிராம சந்தை மேம்பாட்டுத் திட்டம். | 1,00,00 | 1 | 1 | 0 |
| 59 | அலுவலக கட்டிடங்கள் கட்டுதல் – ஊரக வளர்ச்சி இயக்குநரால் செயல்படுத்தப் படுபவை. | 0 | 15,0,00 | 1,50,00 | 1,00,00 |
| 60 | ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம்– கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள். | 75,00,00 | 57,400,0 | 74,81,33 | 1 |
| 61 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். | 328,00,00 | 3694,4,00 | 378,25,38 | 377,82,26 |
| 62 | சுயஉதவிக் குழுவினரிடையே போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல். | 0 | 0 | 1,60,00 | 1,60,00 |
| 63 | சுயஉதவிக் குழுவினருக்கான எழுத்தறிவு திட்டம்.. | 0 | 0 | 1,75,20 | 1,75,20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 63 | சுயஉதவிக் குழுவினருக்கான எழுத்தறிவு திட்டம்.. | 0 | 0 | 1,75,20 | 1,75,20 |
| 64 | சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்– கிராம ஊராட்சிகள். | 0 | 19,21,67 | 24,32,79 | 37,73,88 |
| 65 | வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அவற்றின் கூட்டாண்மை சமூக பொறுப்பு களுக்காக விருதுகள் வழங்குதல். | 0 | 0 | 25,00 | 25,00 |
| 66 | மாவட்டங்களில் கம்பியில்லா தந்தி ஏற்பாட்டு முறையை அமைத்தல். | 0 | 0 | 3,76,00 | 78,00 |
| 67 | உலக வங்கி உதவியுடன் கூடிய அவசரகால சுனாமி மறு புனரமைப்பு திட்ட மேலாண்மை அலகு | 0 | 0 | 3,87,20 | 4,30,83 |
| 68 | அவசரகால சுனாமி மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் கூடிய திட்டம் | 0 | 0 | 1,53,74 | 90,40 |
| 69 | நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துதல் | 0 | 0 | 50,01,00 | 50,00,00 |
| 70 | மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதி திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்துதல். | 0 | 0 | 2,82,97 | 2,82,97 |
| 71 | நபார்டு உதவியுடன் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் சாலைப் பணிகளை செயல்படுத்துதல். | 0 | 0 | 120,00,00 | 290,00,00 |
| | | **1740,07,96** | **1642,44,50** | **1953,46,52** | **23,24,74,12** |

மத்திய அரசு திட்டங்கள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | கணக்குத் தலைப்புகளின் கீழ் உள்ள திட்டத்தின் பெயர் | கணக்குகள் 2006–07 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2007–08 | திருத்திய மதிப்பீடு 2007–08 | வரவு செலவு 2008–09 |
|---|---|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த மகளிர் அதிகாரமளிப்பு திட்டம் | 0 | 1 | 1 | 0 |
| 2 | தன்னிறைவுத் திட்டம் | 1,50,01 | 1 | 1 | 0 |
| 3 | உயிரனக் கழிவு எரிவாயு இயந்திரங்களை நிறுவுதல் | 90,86 | *1,68,89* | 1,45,58 | 1,68,71 |
| 4 | நவீன அடுப்புத் திட்டம் பற்றி கட்புள விளக்கம் அளிப்பது குறித்து தேசிய திட்டம் | 4,45 | 61 | 4,86 | 1,28 |
| 5 | ஊராட்சித் துறை அலுவலர் களுக்கு பயிற்சிக்கான திட்டம். | 15 | 1 | 1 | 0 |
| மொத்தம் | | **2,45,47** | **1,69,53** | **1,50,47** | **1,69,99** |

சுருக்கம்

(ரூபாய் ஆயிரத்தில்)

| திட்டங்கள் | கணக்குகள் 2006–07 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2007–08 | திருத்திய மதிப்பீடு 2007–08 | வரவு செலவு 2008–09 |
|---|---|---|---|---|
| திட்டத்தில் சேராதவை. | **1382,55,29** | **1818,24,83** | **2098,15,61** | **2188,07,76** |
| மாநிலஅரசுத் திட்டங்கள் | **1740,07,96** | **1642,44,50** | **1953,46,52** | **2324,74,12** |
| மத்திய அரசு திட்டங்கள் | **2,45,47** | **1,69,53** | **1,50,47** | **1,69,99** |
| மொத்தம் | **3125,08,72** | **3462,38,86** | **4053,12,60** | **4514,51,87** |

## இயல் – 3

## மாநிலத் திட்டங்கள்

### 1. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டத்தை அரசாணை எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2) நாள்.11.09.2006 மற்றும் அரசாணை எண்.189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2) நாள்.27.12.2006ல் அரசு அறிவித்துள்ளது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த மட்டில் தற்போது, செயலாக்கத்தில் உள்ள அனைத்து மத்திய, மாநிலத் திட்டங்களிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 21.01.2007 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள திருமாதலம்பாக்கம் ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டது.

அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டப்பூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின் கீழ் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். 1997 முதல் 2002–ம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டில் (2010–11)ல் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 2006–07ம் ஆண்டு ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வீதம் 2,540 கிராம ஊராட்சிகளுக்கு அரசு மொத்தம் ரூ.508 கோடி ஒதுக்கீடு செய்தது. 2007–08ம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 511.86 கோடியில் 2,534 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

## 2. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப் படும் திட்டமாகும். இத்திட்டம் 1997–98 ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சட்ட மன்றத் தொகுதிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினரும், தனது தொகுதியில் செய்யப்பட வேண்டிய மேம்பாட்டு பணிகளை தேர்ந்தெடுத்து பரிந்துரைப்பார், பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி வழங்குவார். ஆரசாணை நிலை எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மாஅதி–2), நாள் 29.9.06ல் 2006–07ம் ஆண்டுக்கு ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீட்டை தலா ரூ1.00 கோடியிலிருந்து ரூ1.20 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து 2007–20008 ஆண்டிலும் ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கும் தலா ரூ1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 50 சதவீதம் **(ரூ.60 லட்சம்)** நிதி அரசு குறிப்பிட்டுள்ள **முன்னுரிமை பணிகளை** எடுத்து செய்வதற்கும் **மீதமுள்ள 50 சதவீதம்**(ரூ.60 லட்சம்) **தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறும் பணிகளை தவிர்த்து** சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரின் விருப்ப பணிகளை நிறைவேற்றவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2007–08ம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட பணிகளில் கீழ்க்கண்ட பணிகள் முன்னுரிமைப் பணிகளாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆ) <u>ஊரகப் பகு.திகளில்</u> – 1. கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல் / தார் சாலைகளை புதுப்பித்தல் 2. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் ஆ. <u>நகர்ப்புறப் பகுதிகளில்</u> 1. கப்பிச் சாலைகளை தார்சாலையாக மேம்படுத்துதல் / தார்ச் சாலைகளை புதுப்பித்தல் 2. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் 3. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

2007–08 ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ரூ282.00 கோடியில் 25473 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**3. ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்.**

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 22,000 ஆரம்ப மற்றும் 4500 நடுநிலைப் பள்ளிகளில், அநேக பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி, பழுதடைந்த நிலையில் இருந்ததால், 2007–08ம் ஆண்டிற்கான, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், 2007–08ம் ஆண்டு முதல், " ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் " என்ற சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பள்ளி கட்டிடங்களில், பழுது நீக்கம் செய்யவும், வெள்ளையடித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், ரூ135.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஊராட்சிகளில் ரூ.135.00 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளுக்கு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**4, நமக்கு நாமே திட்டம் 2007–08**

நமக்கு நாமே திட்டம் மாநில அரசு திட்டமாகும். குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பாகவும், இரண்டு பங்குத் தொகை அரசு மான்யமாகவும் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அவசியமான பணிகளைப் பொதுமக்களே தேர்வு செய்து திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தலாம்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிக் கட்டிடங்கள் (சுற்றுச் சுவர் உட்பட), நூலகங்கள், மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், கால்நடை மருந்தகங்கள், மதிய சத்துணவுக் கூடங்கள், விடுதிகள், குடிநீர் ஆதாரப்பணிகள், அரசு நியாய விலைக்கடைகள், பாலங்கள் மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல், சாலைகள் மற்றும் தெருக்களை தரம் உயர்த்துதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் அமைத்தல், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டுக்கள், நீரூற்று, தெருவிளக்குகள், அறைகலன்கள் (பர்னிச்சர்), அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு கணிணி மற்றும் உபகரணங்கள் வாங்குதல், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை எடுத்துச் செய்யலாம்.

இத்திட்டத்திற்காக 2007 –08ம் ஆண்டில் அரசு ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

5. நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலைகள் மேம்பாடு திட்டம்

**( NABARD-RIDF-XIII-2007-08)**

2007–08–ம் ஆண்டில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2006–07 –ஆம் ஆண்டிற்கு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமங்களில் ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள நபார்டு வங்கி ( RIDF-XIII) நிதி உதவியுடன் ரூ.410 கோடி மதிப்பீட்டில் 3989 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, முதல் தவணையாக ரூ.120.00 கோடி அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவுற்று பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள தொகை 2008–09–ம் ஆண்டுக்குள் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. 12–வது நிதிக்குழு மான்யம் – சாலைப் பணிகள் 2007–08

103.60 கோடி மதிப்பீட்டிற்கு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2006–07–ஆம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்றடையும்/இணைப்புச் சாலைகளை சீரமைக்கவும் மற்றும் மேம்பாடு செய்யவும், நெடுஞ்சாலைத் துறை அரசாணை நிலை எண்.222 (எச்.வி.2) நாள் 01.11.2006 மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட 1897.05 கி.மீ. நீளமுள்ள, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

2007–08–ம் ஆண்டிற்கு, 1821.25 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் 103.60 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதுவரை 1554.96 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.66.71 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

**7. தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் நக்சலைட்டுகள் உருவாகும் சூழ்நிலையை தடுக்கும் பொருட்டு 2003–04லிருந்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2007–08ம் ஆண்டில், புதிய வீடுகள் கட்டுதல், குடிநீர் வசதி, தெருவிளக்குகள் அமைத்தல், இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு தொழில்சார்ந்த பயிற்சிகள் அளித்தல் போன்றவைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2007–08ம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ.7.00 கோடியும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.50 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. உத்தமர் காந்தி ஊராட்சி விருது**

ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளை கவு'ரவிக்கும் வகையில், அரசாணை நிலை எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை நாள் 5.9.2006ன்படி உத்தமர் காந்தி ஊராட்சி விருது அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2006–07ம் ஆண்டிற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட 124 கருத்துருக்களில், 45 கருத்துருக்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையிலான குழுவின் தள ஆய்விற்குத் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட 15 கிராம ஊராட்சிகளுக்கு, கேடயமும், ரூ.5.00 இலட்சம் ரொக்கப் பரிசும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு பதக்கமும், நற்சான்றிதழும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 10.10.2007 அன்று வழங்கப்பட்டது.

2007–08ம் ஆண்டிற்கான உத்தமர்காந்தி ஊராட்சி விருது வழங்கும் வகையில், ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விருதிற்கான ஊராட்சிகளை தேர்வுசெய்யும் பணி, நடைபெற்று வருகிறது

## இயல் – 4

## மத்திய அரசுத் திட்டங்கள்

### 1. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்.

ஜவஉறர் ரோஜ்கார் யோஜனாவின் துணைத்திட்டமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் 1997–98 முதல் தனித்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருவதற்கு மானியம் வழங்குவதாகும். வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள பயனாளிகளின் பட்டியலில் இருந்து கிராமசபையினால் அங்கீகரிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த ஒதுக்கீட்டில் குறைந்த பட்சம் 60% தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும் (SC/ST) அதிகபட்சமாக 40% மற்ற இனத்தவருக்கும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கு 3% நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும் மத்திய அரசு அறிவுறுத்தியபடி 15% சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

### 1. 1 புதிய வீடுகள்

1.4.2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.25,000/– எனவும் கடினவகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.27,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி 2008 மத்திய அரசின் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் , இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.10,000/– உயர்த்தப்பட உள்ளதால் சாதாரண மண்பரப்பில் கட்டப்படும் வீட்டிற்கு ரூ.35,000/–எனவும், கடின மண் பரப்பில் கட்டப்படும் வீட்டிற்கு ரூ.37,500/– எனவும் அலகுத்தொகை உயர்த்தப்படஉள்ளது. இது தவிர 2006–07 முதல் புதிய வீடு ஒன்றுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக ரூ.9000 த்திலிருந்து ரூ.12,000/–மாக தொகை உயர்த்தப்பட்டு மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. வீட்டின் குறைந்த பட்ச பரப்பளவு 20 சதுர மீட்டராகும். புதிய வீடுகள் அனைத்தும் சுகாதார கழிப்பிடம் மற்றும் புகையில்லா சூளா அடுப்புகளுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள் மூலம் செலவு குறைவான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர்.

2007–08ம் ஆண்டு மத்திய , மாநில அரசுகளின் மொத்தப் பங்குத் தொகை ரூ.255.32 கோடி மதிப்பீட்டில் (புதிய வீட்டுக்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு மாநில அரசின் கூடுதல் நிதி ரூ.82.22 கோடியினை சேர்த்து ) 68,523 புதிய வீடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

**1.2. கச்சா வீடுகளை மேம்படுத்துதல்**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் துணைத்திட்டமான இத்திட்டத்தின்கீழ் மொத்த ஒதுக்கீட்டிலிருந்து அதிகபட்சமாக 20% நிதியை பயன்படுத்த வழிவகை உள்ளது. கச்சா வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரூ.12,500/– ஆகும்.

2007–08ம் ஆண்டு ரூ.19.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 15384 கச்சா வீடுகளை மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டன.

**2. சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா**

ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு குறைவாக உள்ள காலங்களில் வருமானம் தரக்கூடிய கூடுதலான வேலைவாய்ப்பினை உருவாக்குவதுடன், சத்தான உணவு பாதுகாப்பினை வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் மூ*லம் நிலையான சமூ*க மற்றும் பொது சமுதாய சொத்துக்களை உருவாக்குவது மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது இத்திட்டத்.தின் இரண்டாவது நோக்கமாகும். இத்திட்டம் மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளில் மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களை 20 30 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து அளிப்பதின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2007–08–ம் ஆண்டில், மத்திய அரசு மூலம் ரூ. 159.61 கோடியும், மாநில அரசு நிதியாக ரூ.66.51 கோடியும் விடுவிக்கப்பட்டு, மொத்த நிதி ரூ.226.12 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. (*கடந்த ஆண்டின் மத்திய அரசின் பங்குத் தொகைக்கான மாநில அரசின் பங்குத் தொகை ரூ.13.31 கோடி நடப்பாண்டில் விடுவிக்கப்பட்டதையும் உள்ளடக்கியது). மேலும் 0.96 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டட இத்திட்டத்தில் 29.2.08 வரை 59443 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 191.906 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டது.

இத்திட்டம் 31.3.08 உடன் முடிவடைந்துவிட்டது. அத்திட்டத்திற்கு மாற்றாக 1.4.08 முதல் அனைத்து மாவட்டங்களிலும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**3. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்–தமிழ்நாடு**

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், 2.2.2006ல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 2007–08ல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள்**

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் வேலைக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

31.3.2008 வரை ரூ. 619.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டதுடன், 800 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பயனடைந்தவர்களில் 82 சதவீதம் பெண்களும், 56 சதவீதம் ஆதிதிராவிடர்களும் ஆவர். இத்திட்டம், கிராமப்புற ஊதியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**4. பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் (பி.எம்.ஜி.எஸ்.ஒய்)**

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் இந்திய அரசால் 2000–ம் ஆண்டு டிசம்பர் 25 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2003–ம் ஆண்டிற்குள் 1000–க்கும் மேல் மக்கள் தொகை உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கும் 2007–ம் ஆண்டிற்குள் 500–லிருந்து 1000 வரை மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கும் அனைத்து பருவ நிலைகளுக்கும்

ஏற்ற சாலைகள் அமைக்கப்படுவது முக்கிய நோக்கமாகும். இது 100 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்களுக்கான (2000–01 முதல் 2003–04 வரை) பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், இத்திட்டத்தின் நான்காம் கட்டப் பணிகள் அரசாணை (நிலை) எண்.301, நெடுஞ்சாலைத் துறை நாள் 22.12.2004–ன் படி நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்ட செயலாக்கத்தின் அனைத்து நிலைகளிலும் ஊராட்சி அமைப்புகளை ஈடுபடுத்த வேண்டியிருப்பதால், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசாணை (நிலை) எண்.95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17.08.2006–ன்படி மீண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால் தமிழ்நாடு ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மத்திய அரசிலிருந்து நிதியைப் பெறுவதற்கான தொடர்பு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டது. இது, முதல் மூன்று மற்றும் ஐந்தாம் கட்டப் பணிகளை செயல்படுத்துவதோடு, இனிவரும் கால கட்டப் பணிகளையும் நடைமுறைப்படுத்துவது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்ற நிலையில் சில நடைமுறை சிக்கல்களுக்கு வழிவகுத்தது. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரின் நிர்வாக வரம்பிற்குள் செயல்படும் தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினை மாநிலத்தின் தொடர்பு நிறுவனமாக அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 14.01.2007–ன்படி நியமனம் செய்தது.

முதல் மூன்று கட்டங்களில் (2000–01 முதல் 2003–04 வரை) ரூ.434.10 கோடி மதிப்பீட்டில் 3364.62 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதுவரை 3274.60 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.385.12 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.117.27 கோடி மதிப்பீட்டில் 820.46 கி.மீ.க்கான நான்காம் கட்டப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையினால் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை ரூ.81.45 கோடி செலவில் 642.86 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் கட்டப் (2005–06) பணிகள் ரூ.182.05 கோடி மதிப்பீட்டில் 849.13 கி.மீ. சாலைப் பணிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முதல் தவணையாக ரூ.91.025 கோடி நிதி மாவட்ட ஊரக வளர்ச்சி

முகமைகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.67.81 கோடி செலவில் 296.48 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**5. பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டம்**

வறுமை ஒழிப்புத் திட்டங்களில் முக்கியமான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டம் கடந்த 1999–ம் ஆண்டு ஏப்ரல் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக ஏழை மக்களுக்கு தொடர் வருமானம் கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டு வருவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை ஒரு சுய உதவிக் குழுவாக ஒருங்கிணைத்து, அவர்களுக்கு வேண்டிய அடிப்படைப் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சந்தைப்படுத்துதலில் உதவி ஆகியவற்றை அளித்து, பின் அவர்கள் சுய தொழில் துவங்குவதற்கு ஏதுவாக மானியத்துடன் கூடிய கடன் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியினை மத்திய, மாநில அரசுகள் முறையே 75 : 25 விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

சுய உதவிக்குழுக்கள் முதலாவது தரம் பிரித்தலுக்கு பிறகு சுழல் நிதியாக ரூ.25,000 (அரசு மான்யம் ரூ.10,000 மற்றும் வங்கிக் கடன் ரூ.15,000) வழங்கப்படுகிறது. இரண்டாவது தரம் பிரித்தலுக்கு பிறகு தகுதியுள்ள குழுக்களுக்கு பொருளாதார கடனுதவி அளிக்கப்படுகிறது.

குழுக்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வரை மான்யம் வழங்கப்படுகிறது. தனி நபர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூ.7500/– அல்லது 30 சதவிகிதம் மான்யம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை பொறுத்தவரை திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10,000/– மான்யமாக வழங்கப்படுகிறது.

2007–08–ம் ஆண்டு மொத்த ஒதுக்கீடு ரூ 105.87 கோடியில் 18,056 குழுக்களுக்கு சுழல் நிதியும் 5,430 குழுக்களுக்கு பொருளாதார கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

## 6. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள் மூலம் உருவாக்கப்படும் உள் கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் இடைவெளிகளை நிரப்பி முழுமையான வளர்ச்சியினை உறுதிப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள்) ஆண்டுதோறும் தலா ரூ.2.00 கோடி மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் வளர்ச்சிப் பணிகள் நாடாளுமன்ற தொகுதியில் செயலாக்கப்படுகின்றன. மக்களவை உறுப்பினர்களைப் பொருத்தமட்டில், அவரவர்கள் தொகுதிக்குட்பட்ட இடங்களில், அவர்கள் பரிந்துரைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தில் எந்த பகுதியிலும் பணியினை பரிந்துரை செய்யலாம். நியமன உறுப்பினர்களை பொறுத்தமட்டில் ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கான பணிகளை இந்தியாவில் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் பரிந்துரைக்கலாம். ஒவ்வொரு ஆண்டும் மொத்த நிதியில் மொத்த நிதியான ரூ. 2.00 கோடியில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிக்காக 15% நிதியை ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் பணிகள் எடுக்கவும், 7.5% நிதியை பழங்குடியினரின் பகுதிகளில் பணிகள் மேற்க்கொள்ளவும் செலவிடப்பட வேண்டும். பழங்குடியினர் வசிக்கும் பகுதி இல்லையெனில் 22.5% நிதியை ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிக்கு செலவிடலாம்.. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்து பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்கிய பின் ‘‘திறந்த ஒப்பந்தப்புள்ளி‘‘ முறையில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

வழிகாட்டி நெறிமுறைகளில் அனுமதிக்கப்படாத பணிகள் பற்றிய விவரமும் கூறப்பட்டுள்ளது.

2007–2008ம் ஆண்டில் ரூ.114.00 கோடி நிதி ஆதாரத்துடன் 3759 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 7. முழு சுகாதார இயக்கம்

1.4.99 முதல் ஒருங்கிணைந்த கிராம சுகாதாரத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு முழு சுகாதார இயக்கமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது

கிராமப்புறங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது இவ்வியக்கத்தின் நோக்கமாகும். மக்களின் சுகாதாரத் தேவைகளின் அடிப்படையில் அவர்களின்

பங்கேற்புடன் செயல்படுத்தப்படுவது இவ்வியக்கத்தின் நோக்கமாகும். ரூ.797.04 கோடி மதிப்பீட்டில் 1999–2000–ம் ஆண்டு முதல் பல கட்டங்களாக 29 மாவட்டங்களிலும் இவ்வியக்கம் செயல்படுத்தப்படுகிறது. முழு சுகாதார இயக்கத்தில் 2007–08–ம் ஆண்டில் அடைந்த சாதனை விவரம் அட்டவணை –1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை–1</u>

<u>முழு சுகாதார இயக்கத்தின் சாதனை விவரம்</u>

| வ.எண் | கூறுகள் | சாதனை |
|---|---|---|
| 1. | தனி நபர் இல்லக் கழிப்பறை (வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர்) | 42,14,089 |
| 2. | தனி நபர் இல்லக் கழிப்பறை (வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளோர்) | 21,31,119 |
| 3. | பள்ளிக் கழிப்பறைகள் | 33,436 |
| 4. | அங்கன்வாடி கழிப்பறைகள் | 21,773 |
| 5. | சுகாதார வளாகங்கள் | 693 |
| 6. | ஊரக சுகாதார விற்பனை மையங்கள் / உற்பத்தி மையம் | 197 |

மத்திய அரசு, தனி நபர் இல்லக் கழிப்பறை மான்யத்தை ரூ.600/–லிருந்து ரூ.1200/–ஆக 1.4.2006 முதல் உயர்த்தியுள்ளது.

**8. தேசிய கரிம வாயுத் திட்டம்**

தேசிய கரிம வாயுத் திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பொதுப் பிரிவினருக்கு ரூ,2100/–ம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ.2800/–ம் மற்றும் மலைப்பகுதியில் ரூ.3500/–ம் மானியமாக வழங்கப்படுகிறது. 2007–2008ம் ஆண்டில் மான்யத் தொகை ரூ.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1500 கரிம எரிவாயுக் கலன்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

2007–2008–ம் ஆண்டின் மொத்த குறியீட்டில் 1,084 கரிம எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இயல்–5

## மனித வள மேம்பாடு

2007–08ஆம் ஆண்டில் பயிற்சி திட்டங்கள் தரத்தினை உயர்த்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், இதர துறையினர் ஆகியோருக்கு மாநிலத்தில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. மேற்படி பயிற்சியில் ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரித்தல், மத்திய மாநில அரசு நிதியுடன் கூடிய திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல், ஊராட்சிகளுக்கான நிதி ஆதாரங்களை பெருக்குதல், ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது தவிர தமிழ்நாடு ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், தகவல் பெறும் உரிமை, பேரிடர் மேலாண்மை ஆகியவை தொடர்பான சிறப்பு பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பழங்குடியினர் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் செயலாக்கம் தொடர்பான பயிற்சிப் புத்தகங்கள், பயிற்சி நிறுவனம் மூலமாக வெளியிடப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி திட்டங்கள் பற்றி பயிற்சி அளித்திட பயிற்சி தொகுப்பு நிதி ஆண்டுதோறும் ரூ.3.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறந்த செயல்பாடுகளை நேரில் கண்டறிவதற்கு ஏதுவாக மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் பட்டறிவு பயணங்கள் மேற்கொள்ள இந்த நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு 8 அணிகளாக பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சித் தலைவர்கள் கோயமுத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள சிறந்த ஊராட்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ள பகுதிகளுக்கு பட்டறிவு பயணம் மேற்கொண்டுள்ளனர். அதில் 447 ஊராட்சி தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேலும் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி திட்டங்கள் தொடர்பாக இரண்டு நாள் பயிற்சி மற்றும் பயிலரங்கு 12 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 600 உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

2007–08ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் நிர்வாக செலவுகளுக்காக ரூ.3.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இயல் – 6

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மான்யம் மற்றும் வருவாய்கள்

### 1. மான்யம்

### அ. மாநில நிதி ஆணைய மான்யம்

மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து (கேளிக்கை வரி நீங்கலாக) உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி பங்கீடு 8% சதவிகிதத்திலிருந்து 9% சதவிகிதமாக 2007–08–ல் உயர்த்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மாநில மொத்த வரி வருவாயில் (கேளிக்கை வரி நீங்கலாக) 9 % உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. இப்பகிர்வு மான்யம், நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58:42 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதிக்கப்படும் மாநில நிதி ஆணைய மான்யம் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32:8 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. இந்த மான்யம் மாதந்தோறும் விடுவிக்கப்படுகிறது.

2007–08–ம் ஆண்டில் 1583.59 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

### ஆ. பன்னிரெண்டாவது மத்திய நிதி ஆணைய மான்யம்

தமிழ்நாட்டிற்கு 2005–06 முதல் 2009–10 வரையிலான காலத்திற்கு பன்னிரெண்டாவது மத்திய நிதி ஆணைய பரிந்துரைப்படி மானியமாக ரூ.870 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மானியம் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 174 கோடி விடுவிக்கப்படுகிறது.

இந்த மான்யத்தை கீழ்க்கண்ட இனங்களுக்கு பயன்படுத்தலாம் :-

1. விசைப்பம்பு மற்றும் சிறுவிசைப்பம்புகளுக்கான மின் கட்டணங்களைச் செலுத்துதல்.
2. குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்துதல்.

3. குடிநீர் மற்றும் சுகாதாரம் சம்மந்தமான சொத்துக்களை ஊராட்சிகள் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அவைகளின் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளுடன் இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
4. இம்மானிய நிதியினை சம்பளம் மற்றும் கூலி போன்றவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது.

2007–08ம் ஆண்டு முதல் இந்த மான்யம் முழுவதுமாக கிராம ஊராட்சிகளுக்கு, அதாவது ரூ.174.00 கோடி மட்டும் விடுவிக்கப்படுகிறது. இதிலிருந்து மின் கட்டண நிலுவைத் தொகை மின் வாரியத்திற்கு செலுத்துதல், குடிநீர் வசதி சம்மந்தப்பட்ட செலவினங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு கிராம ஊராட்சிகளால் பயன்படுத்தப்படுகிறது.

இ. முழுநேர மற்றும் பகுதி நேர ஊரக மருந்தகங்களின் பராமரிப்பு

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 112ல் ஊரக மருந்தகங்களை ஊராட்சி ஒன்றியங்கள் நிறுவுவதற்கு வழிவகையுள்ளது. இதன்படி ஊராட்சி ஒன்றியங்கள் பொது சுகாதாரத்தை தங்கள் பகுதிகளில் செயல்படுத்துகின்றன. ஆண்டிற்கு முழுநேர மருந்தகங்கள் பராமரிப்பு செலவில் ரூ.5,400./ மற்றும் பகுதி நேர மருந்தகங்கள் பராமரிப்பு செலவில் ரூ.2,040/ என்ற வரம்பிற்குட்பட்டு 50 சதவிகிதம் மான்யமாக வழங்கப்படுகிறது.

தற்போது 87 முழுநேர மருந்தகங்களும், 110 பகுதிநேர மருந்தகங்களும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.6.94 லட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

2. வரிவருவாய்

அ. வீட்டு வரி

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 172–ன்படி வீட்டுவரி விதிப்பது மற்றும் வசூலிப்பது கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படுகிறது. மொத்த வருவாயும் கிராம ஊராட்சிக்கு வரவு வைக்கப்படுகிறது. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.72.74 கோடி வசூலிக்கப்பட்டது.

ஆ. தொழில் வரி

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 198ல் கூறப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சிகளால் தொழில்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.37.25 கோடி வசூலிக்கப்பட்டது.

3. வரியினம் சாரா வருவாய்கள்

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் தண்ட கட்டணம், உரிமக் கட்டணம், சந்தைக் கட்டணம், மீன்பாசி குத்தகை, குடிநீர் கட்டணம் போன்றவை மூலமாக கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டுகின்றன. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.43.97 கோடி வரியினம் சாரா வருவாயாக வசூலிக்கப்பட்டது.

4. ஒப்படைக்கப்பட்ட வருவாய்

கேளிக்கை வரிச் சட்டம் 1939ன் கீழ் வசூலிக்கப்படுகின்ற கேளிக்கை வரி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் கீழ் வரி விதிக்கப்படுகின்ற முத்திரைத் தாள் மீதான மிகுவரி, தலவரி, தலமேல்வரி, ஆகியவை ஒப்படைக்கப்பட்ட வருவாயில் அடங்கும். மேற்கண்ட வருவாய்கள் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து காலாண்டு அடிப்படையில் ஊரக உள்ளாட்சி கணக்குகளுக்கு மாவட்ட அளவில் சரிக்கட்டப்பட்டு வந்தது.

இதனால், பல துறைகளிலிருந்து ஊராட்சிகளுக்கு நிதி சரிகட்டப்படுவதில் சீரற்ற தன்மையும், தாமதமும் ஏற்பட்டது. இதனை சீரமைக்கும் விதமாக, மேற்படி வருவாயை மாநில அளவில் ஒருங்கிணைத்து மாநில நிதிக் குழு மானியம் பகிர்வு செய்வதைப் போல மேற்படி ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க ஏதுவாக அரசாணை எண். 168, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (சி4) துறை நாள்– 4.10.2007–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2007–08–ம் ஆண்டில், ஒப்படைக்கப்பட்ட வருவாய்கென ரூ. 270 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 180/– கோடி, அனைத்து மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கும், அதனதன் மக்கள் தொகை அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பிரித்து வழங்கப்பட்டது. மீதம் உள்ள ரூ.90 கோடி ஊரக பகுதிகளுக்கான முதன்மைத் திட்டங்களுக்காக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

## 5. கணக்கீட்டு முறைகள்

### அ. அடிப்படை கோட்பாட்டின்படி கிராம ஊராட்சி கணக்குகள்

அரசு அரசாணை நிலை எண் 92 ஊரக வளர்ச்சி துறை நாள் 26.3.97ன்படி கிராம ஊராட்சி கணக்குகள் மற்றும் அதனை பயன்படுத்தும் விதிமுறைகளும் அடிப்படை கோட்பாட்டின்படி மாறுதல் செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு சில குறைபாடுகள் புதிய கணக்கீட்டு முறையில் தெரியவந்தது. ஆகையினால் அரசாணை நிலை 146 ஊ.வ. ப.ரா. துறை நாள் 17.8.2007ன்படி கிராம ஊராட்சிகள் கணக்குகள் பயன்படுத்தும் முறையில் கீழ்கண்டுள்ள ஒழுங்குநெறிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(அ.) கிராம ஊராட்சி தலைவர்களுக்கு மின்வாரியத்திற்கும் குடிநீர்வாரியத்திற்கும் ஏற்படும் செலவினத்தை அவர்களே சரிகட்டும் வகையில் கூடுதல் அதிகாரமும் அதே சமயத்தில் மேற்படி நிதி மற்ற தேவையற்ற திட்டங்களுக்கு செலவினம் செய்வதும் தவிர்க்கப்படுகிறது.

(ஆ). முறையற்ற வழியில் திட்டத்திற்குரிய நிதியும் / தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு உரிய நிதியும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) செலவினம் மேற்கொள்ள இயலாது.

திருத்திய முறையின்படி கிராம ஊராட்சி கணக்குகள் கிராம ஊராட்சியில் கீழ்க்கண்ட மூன்று கணக்குகள் பராமரிக்கப்படும்.

1. கிராம ஊராட்சிகள் கணக்கு
   கிராம ஊராட்சியில் உள்ள குடிநீர் கணக்கு முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள நிதி இக்கணக்கில் வரவு வைக்கப்படும்.
2. கிராம ஊராட்சி செலவினம் மின்வாரியம் / குடிநீர் கணக்கு
3. கிராம ஊராட்சி திட்ட நிதி கணக்கு
4. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட அமுல் படுத்தும் கிராமங்களில் கிராம ஊராட்சி தேசிய ஊரக வேலை உறுதி வேலைவாய்ப்பு திட்ட கணக்கு தனியாக பராமரிக்கப்படவேண்டும்.

ஆ. ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்காணும் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | தலநிதிக் கணக்கு எண்–I | பொது நிதி |
| 2 | தலநிதிக் கணக்கு எண் – II | ஊராட்சிகள் தொகுப்பு நிதி |
| 3 | தலநிதிக் கணக்கு எண்–III | கல்வி நிதி |
| 4 | தலநிதிக் கணக்கு எண் – IV | தன்னிறைவுத் திட்டக் கணக்கு |
| 5 | தலநிதிக் கணக்கு எண் – V | சத்துணவுத் திட்டக் கணக்கு |
| 6 | தலநிதிக் கணக்கு எண்– X | நபார்டு (10%) கணக்கு |

இ. மாவட்ட ஊராட்சிகளில் பொது நிதி கணக்கும், திட்டக் கணக்கும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**6. உடன் நிகழ் தணிக்கை**

இதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளை ஒவ்வொரு காலாண்டிலும் தணிக்கை செய்யவும் அவ்வாறு காலாண்டிற்குள் முடிக்கப்படாவிடில் அடுத்த 90 நாட்களுக்குள் தணிக்கை முடிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**7. தமிழ் நாடு மின்சார வாரியம் தொடர்பு**

கிராம ஊராட்சிகளில் அடிப்படைப் பணிகளான தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் அதிக அளவிலான மின்கட்டணம், வர்த்தக ரீதியிலான மின் கட்டணம், அபராத வரி விதித்தல் போன்ற பல பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது. மேற்காணும் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு கீழ்காணும் நடவடிக்கைகள் 2007–08ம் ஆண்டில் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரக உள்ளாட்சிகளில் உள்ள தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய பணிகளுக்கான மின் கட்டணவிகிதம் 12.4.2007 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.40/–லிருந்து ரூ.3.00/– ஆக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மின்கட்டண விகிதம் குறைக்கப்படுவதால் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு ரூ. 57.84 கோடி ரூபாய் 12.4.2007 முதல் 31.3.2008 வரையிலான காலத்திற்கென தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு மின் வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் 45 நாட்களுக்கு மேல் செலுத்தாமல் நிலுவையிலுள்ள மின் கட்டண தொகைக்கு விதிக்கப்படும் வட்டித் தொகை 12ரூ லிருந்து 6ரூ ஆகவும், குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மின் கட்டணம் செலுத்துவதற்கான கால அளவையும் 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக 13.3.2007 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 13.3.2007 வரையில் கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவையாகவுள்ள அபராத வட்டி தொகை ரூ. 18,46,52,691/– தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சிகளில் புதிய தெரு மின்கம்பங்கள் அமைக்க ஏற்படும் அதிக செலவினத்தையும், காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு 13.3.2007 முதல் இப்பணிகளுக்கு நிலையான கட்டணமாக ஒரு மின்கம்பத்திற்கு ரூ.9,500/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் கிராம ஊராட்சி தலைவர்கள் தாமதமின்றி தெருவிளக்குகள் அமைத்திட ஏதுவாகும்.

குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது தொடர்பாக 2007–08ம் ஆண்டுக்கு ரூ.12.25 கோடி முன்பண மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**8. கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம்.**

இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கவும், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகங்களுக்கு இடையே தடையற்ற தகவல் தொடர்புக்கு, கம்பியில்லா தகவல் தொடர்பு அவசியமாகிறது. ஏனவே, 2007–08ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் , தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில், படிப்படியாக வளர்ச்சித் துறையின் மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு, கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 2007–08ஆம் ஆண்டில், 24 மாவட்டங்களில் ரூ3.76 கோடி மதிப்பீட்டில், கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம் அமைக்க, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.

# இயல் – 7

# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் **1983** ஆம் ஆண்டு பெண்கள் சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் ஆற்றலும் பெற வேண்டுமென்ற தலையாய நோக்கத்துடன் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டத்தினை பிரதானமாக செயல்படுத்தி வருவதுடன் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

## 1. மகளிர் திட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டம் **1989** ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் தொடங்கப்பட்டு, படிப்படியாக வளர்ச்சியடைந்து **1997–98** ஆம் ஆண்டு மகளிர் திட்டமாக உருவெடுத்தது. தற்போது இத்திட்டம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மகளிரை இணைத்து ஒரு மாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாக செயல்பட்டு வருகிறது. மகளிர் திட்டம், தொண்டு நிறுவனங்களின் துணையுடன் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் குழுக்களை கண்காணித்தல் ஆகிய பணிகளை செய்து வருகிறது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை – 2 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை –2**

**வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்**

| வருடம் | செயல் (எண்ணிக்கை) | | நிதி (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|---|---|
| | அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் | சேர்க்கப்பட்ட பெண்கள் | குழு சேமிப்பு | திட்ட நிதி ஒதுக்கீடு | திட்டச் செலவு |
| 1997–1998 வரை | 5,177 | 92,473 | 12.89 | 4.40 | 0.82 |
| 1998–1999 | 6,014 | 1,30,000 | 8.98 | 8.00 | 4.61 |
| 1999–2000 | 15,029 | 2,59,260 | 9.40 | 12.00 | 11.39 |
| 2000–2001 | 49,027 | 8,19,864 | 49.21 | 22.00 | 29.11 |
| 2001–2002 | 30,579 | 5,19,177 | 95.26 | 22.00 | 22.99 |
| 2002–2003 | 20,280 | 3,29,419 | 112.15 | 22.00 | 17.62 |
| 2003–2004 | 36,033 | 6,00,181 | 151.44 | 23.38 | 23.38 |
| 2004–2005 | 36,977 | 5,96,710 | 223.59 | 20.88 | 20.88 |
| 2005–2006 | 1,16,608 | 16,90,748 | 374.76 | 35.62 | 25.06 |
| 2006–2007 | 24,501 | 4,13,919 | 344.54 | 21.26 | 19.80 |
| 2007–2008 | 25,484 | 4,29,124 | 355.59 | 20.88 | 19.20 |

2007–08 ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

- சுழல் நிதி மானியமாக நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் 25,000 குழுக்களுக்கு ரூ.25.00 கோடி நிதி வழங்கப்பட்டது.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தவும், செம்மையாக செயல்பட ஏதுவாகவும் 4,000 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூ.10,000/– ஒதுக்கப்பட்டது.
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் எண்ணத்துடன் சிறப்பாக செயல்படும் அமைப்புகளுக்கு ''மணிமேகலை விருதுகள்'' வழங்கப்பட்டன.
- கூட்டமைப்பின் ஒற்றுமையை வலுப்படுத்தவும், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலைப் போட்டிகள் நடத்த 2007–08 ஆம் ஆண்டில் ரூ.1.60 கோடி நிதி வழங்கப்பட்டது.
- சுய உதவிக் குழு மகளிரிடையே கல்லாமையை அகற்றிட, 2007–08 ஆம் ஆண்டில் ரூ.1.75 கோடி நிதி ஒதுக்கீட்டுடன், 'சுய உதவிக் குழு கல்வி திட்டம்' என்ற திட்டத்தை பரிட்சார்த்த முறையில் அனைவருக்கும் கல்வி திட்டத்துடன் இணைந்து செயல்படுத்திட அரசு ஆணையிட்டது.
- மகளிர் திட்டத்தை ஒருங்கிணைப்புடன் நல்ல முறையில் செயல்படுத்திட, திட்ட செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.
- மகளிர் திட்ட செயலாகத்தை சீரிய முறையில் கண்காணிக்க மாவட்ட அலகில் 60 உதவி திட்ட அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர். மேலும் தலைமை அலுவலகத்தில் மூன்று கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு கூடுதல் இயக்குநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- சுய உதவிக் குழு மகளிர் சமுதாயத்தில் உரிய அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகவும் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு ரூ.2.50 கோடி நிதி வழங்கியுள்ளது.

**2. நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி**

ஊரகப் பகுதிகளிலுள்ள சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிலிருந்து கடன் பெற வசதியாக பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.10,000/– சுழல் நிதி மானியமாக வழங்கப்படுகிறது. அதுபோலவே, நகர்ப்புற சுய உதவிக் குழுக்களும் வங்கிக் கடன் பெற ஏதுவாக 2006–07 ஆம் ஆண்டு முதல் இக்குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிவித்தது. இதற்கென ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்து 30,000 நகர்ப்புற குழுக்கள் சுழல் நிதி மானியம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை–3 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை –3**

**வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்**

| வருடம் | செயல் (குழுக்களின் எண்ணிக்கை) | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 2006–07 | 5,000 | 5,000 | 500 | 500 |
| 2007–08 | 25,000 | 25,000 | 2,500 | 2,500 |

**3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்**

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் ஆற்றல் மற்றும் வளங்களை ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு என்ற பெயரில் கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மையும் தற்சார்பும் பெறுவதை உறுதி செய்ய இயலும். சுய உதவிக் குழுக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் துடிப்பான அமைப்புகளாக, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மாற்ற 2006–07 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.10,000/– வீதம் ஆதார நிதி வழங்க அரசு ஆணையிட்டது.

அதே போன்று, 2007–08 ஆம் ஆண்டிலும் 4,000 கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.10,000 வீதம் வழங்க ரூ.4.00 கோடி ஆதார நிதியாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை–4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை –4

வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்

| வருடம் | செயல் (கூட்டமைப்புகளின் எண்ணிக்கை) | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 2006–07 | 4,000 | 3,637 | 400 | 364 |
| 2007–08 | 4,000 | 2,730 | 400 | 273 |

**4. சுய உதவிக் குழு மகளிருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி**

குழு உறுப்பினர்கள் மற்றும் ஊக்குநர் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் முறையான பயிற்சியே மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சுய உதவிக் குழுக்களின் தனிச் சிறப்பாகும். இப்பயிற்சிகள் மகளிரின் மனப்பாங்கில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் ஒற்றுமையுடன் குழுவாக, சிறப்பாக செயல்பட வழி வகுக்கிறது.

சுய உதவிக் குழு தாத்பரியத்தை அறிமுகப்படுத்த அனைத்து குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத்திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக் குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதி ஆகியோருக்கு 3 பாடத்திட்டங்கள் 6 நாட்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை–5 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை –5

வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்

| வருடம் | செயல் (குழுக்களின் எண்ணிக்கை) | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 2006–07* | 85,000 | 78,750 | 1,864 | 1,585 |
| 2007–08 | 25,000 | 19,084 | 1,080 | 824 |

* ஒதுக்கீடு மற்றும் சாதனை 2005–06 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 60,000 குழுக்களுக்கான பயிற்சியையும் உள்ளடக்கியது.

**5. சுய உதவிக் குழு மகளிருக்கான தொழிற் பயிற்சி**

சுய உதவிக் குழு மகளிருக்கு முன்னர் வழங்கப்பட்ட குறுகிய கால தொழிற் பயிற்சி மற்றும் தனித்து அளிக்கப்பட்ட தொழில் முனைவோருக்கான பயிற்சி அவர்கள் நிலைத்த வருவாய் ஈட்டும் தொழிலில் ஈடுபட போதுமானதாக இல்லை. எனவே, 2007–08 ஆம் ஆண்டு தேசிய ஆடை வடிவமைப்பு பயிலகம் (NIFT), மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI), மத்திய பிளாஸ்டிக் பொறியியல் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் (CIPET) போன்ற சிறப்பான நிறுவனங்கள் வாயிலாக தொழில் தொடங்குவதற்கு அல்லது சுய வேலை வாய்ப்பு பெறுவதற்கு தேவையான தொழிற் பயிற்சி 8,760 மகளிருக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சியுடன் 5 நாட்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சியும் இணைந்து அளிக்கப்பட்டது. இதற்காக அரசு ரூ 4.38 கோடி நிதி வழங்கியுள்ளது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை–6 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை –6**

**வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்**

| வருடம் | செயல் (பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை) | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 1998 – 1999 | 70 | 70 | 15.00 | 12.65 |
| 1999 – 2000 | 100 | 330 | 7.50 | 9.43 |
| 2000 – 2001 | 100 | 270 | 7.50 | 4.55 |
| 2001 – 2002 | – | – | – | – |
| 2002 – 2003 | 50,000 | 34,667 | 100.00 | 100.00 |
| 2003 – 2004 | 12,500 | 18,454 | 100.00 | 100.00 |
| 2004 – 2005 | 12,500 | 12,500 | 100.00 | 100.00 |
| 2005 – 2006 | 12,500 | 12,500 | 100.00 | 100.00 |
| 2006 – 2007 | 23,000 | 23,000 | 350.00 | 350.00 |
| 2007 – 2008 | 8,760 | 8,760 | 438.00 | 438.00 |

**6. இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி**

இளைஞர்களின் ஆற்றலை ஒருங்கிணைத்து ஆக்கப்பூர்வமாக சமுதாயத்திற்கு பயன்படுத்தும் நோக்குடன், இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தினை அரசு **2006–07** ஆம் ஆண்டு தொடங்கியது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் **11,485** இளைஞர்களுக்கு சிறந்த தொழில் நிறுவனங்களான எம்.ஆர்.எப்., செயின்ட் கோபின், நோக்கியா போன்ற நிறுவனங்களின் உதவியுடன் தொழிற் பயிற்சி அளித்துள்ளது. மேலும், **19,698** இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுள் **2,640** இளைஞர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.**10,000/–** வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

செயல் மற்றும் நிதி சாதனை விவரம் அட்டவணை–7 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை –7

வருடாந்திர செயல் மற்றும் நிதி சாதனை விவரங்கள்

| வருடம் | செயல் | | | | | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொழிற் பயிற்சி (பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை) | | சுழல் நிதி (குழுக்களின் எண்ணிக்கை) | | குழு அமைத்தல் (குழுக்களின் எண்ணிக்கை) | | | |
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 2006–07 | 5,000 | 5,634 | 1,500 | 1,500 | 10,000 | 10,009 | 1,000 | 920 |
| 2007–08 | 5,000 | 5,851 | 1,140 | 1,140 | 10,000 | 9,689 | 1,000 | 995 |

**7. பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம்**

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ.**298.57** கோடி திட்ட முதலீட்டில், எட்டு வருட காலத்திற்கு கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக சமுதாய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், மீன் விற்பனைச் சங்கங்கள் அமைத்தல், சுய உதவிக் குழுக்களை பயிற்சிகள் மூலம் வலுப்படுத்துதல், இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி அளித்தல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு சிறுகடன்கள் வழங்குதல் போன்ற செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ஆரம்ப கட்ட செயல்பாடுகளுக்காக 2007–08 ஆம் ஆண்டில் அரசு ரூ.10.00 கோடி நிதி வழங்கி உள்ளது.

# இயல் – 8

## வாழ்ந்து காட்டுவோம்

மக்களே செயல்படுத்துதல் அடிப்படையில் அமைந்துள்ள வாழ்ந்து காட்டுவோம் திட்டம், ஏழை எளிய மக்களை ஆற்றல்படுத்தவும் அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் தனிக் கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தின் இலக்கு ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய குடும்பங்கள், மிகவும் நலிவுற்றோர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஊனமுற்றோர் ஆவர். இத்திட்டத்தின் இலக்கு மக்கள், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஆய்வு மூலம் கண்டறியப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| திட்டத்தின் நோக்கம் | : | ஊரகப் பகுதியிலுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களை ஆற்றல்படுத்த,<br>• ஏழைகளுக்கு உதவும் மக்கள் அமைப்புகளையும் குழுக்களையும் உருவாக்கி பலப்படுத்துவது (கிராம ஊராட்சிகள் உட்பட)<br>• ஏழைகளின் திறமைகளையும், தொழில் திறன்களையும் மேம்படுத்துவது மற்றும்<br>• மக்களின் தேவைக்கேற்ப, தொழில் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பது. |
| திட்டத்தின் மொத்த மதிப்பீடு | : | ரூ.717.10 கோடி |
| திட்டத்தின் காலம் | : | 6 ஆண்டுகள் |
| திட்டம் தொடக்க ஆண்டு | : | 2005–06 |

**1. திட்டக் கூறுகள்:**

இத்திட்டத்தின் முக்கியமான திட்டக்கூறுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை –8

திட்டக் கூறு வாரியாக நிதி ஒதுக்கீடு

| வ. எண். | திட்டக் கூறு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடிகளில்) | % |
|---|---|---|---|
| அ 1 | மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுவாக்குதல் | 69.90 | 9.75 |
| அ 2 | கிராம நிதி | | |
| | அ. கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி | 200.10 | 27.90 |
| | ஆ. வாழ்வாதார நிதி | 299.00 | 41.70 |
| | இ. கிராம ஊராட்சி ஊக்க நிதி | 48.00 | 6.70 |
| | ஈ. சார்பு தொழில் வல்லுநர்கள் மற்றும் கூட்டமைப்பு மேம்பாட்டு நிதி | 20.00 | 2.80 |
| ஆ | கிராம வாழ்வாதார மேம்பாட்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அலகுகளின் உதவி | 31.54 | 4.40 |
| இ | திட்ட மேலாண்மை | 48.56 | 6.75 |
| | **மொத்தம்** | **717.10** | **100.00** |

**2. திட்ட செயலாக்கப்பகுதிகள்**

இத்திட்டம் 15 மாவட்டங்களில், மிகவும் பின் தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2,480 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டம் மற்றும் வட்டாரங்களின் விவரம் அட்டவணை –9ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 9

திட்ட செயலாக்கப் பகுதிகள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 5 | 80 |
| 2 | கடலூர் | 4 | 236 |
| 3 | காஞ்சிபுரம் | 4 | 231 |
| 4 | நாகப்பட்டினம் | 4 | 182 |
| 5 | நாமக்கல் | 6 | 121 |
| 6 | இராமநாதபுரம் | 4 | 164 |
| 7 | சேலம் | 6 | 146 |
| 8 | தேனி | 4 | 81 |
| 9 | திருவள்ளூர் | 5 | 203 |
| 10 | திருவாரூர் | 4 | 159 |
| 11 | திருநெல்வேலி | 6 | 156 |
| 12 | திருவண்ணாமலை | 4 | 160 |
| 13 | தூத்துக்குடி | 4 | 154 |
| 14 | வேலூர் | 5 | 211 |
| 15 | விழுப்புரம் | 5 | 196 |
| | மொத்தம் | **70** | **2,480** |

### 3. திட்ட செயலாக்கத்தில் முன்னேற்றம்

இத்திட்டம் அக்டோபர் 2006 முதல் 15 வட்டாரங்களில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் 2007 முதல் மேலும் 15 வட்டாரங்களில் இரண்டாம் கட்டமாகவும், 1,177 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்கப் பகுதிகளில் பின்வரும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- மாவட்ட அளவிலும், பகுதி அளவிலும் பணியாளர்கள், அறிமுக பயிற்சி அளிக்கப்பட்டு பணியிலுள்ளனர்.

- தற்போது திட்டம் செயல்படுத்தப்படும் 1,177 கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சி தொடக்க நிதி தலா ரூ.35,000/– வழங்கப்பட்டுள்ளது.
- மக்கள் பங்கேற்போடு இலக்கு மக்களை கண்டறியும் பணி 1,162 கிராம ஊராட்சிகளில் முடிவடைந்து, கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- 1,147 கிராம ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பழங்குடியினர் குடியிருப்புகளில் 42 சிறப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- முதல் தவணையாக 696 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ரூ. 20.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு 2,629 புதிய சுய உதவிக் குழுக்களும், ஊனமுற்றோரை கொண்டு 1,619 புதிய சுய உதவிக் குழுக்களும் தொடங்கப்பட்டுள்ளன.
- இத்திட்டத்தின் மூலமாக 14,294 ஊனமுற்றோருக்கு தேசிய அடையாள அட்டைகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.
- மகளிர் திட்டத்துடன் இணைந்து, 2,694 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூன்றாம் கட்டமாக 19 வட்டாரங்களில் உள்ள 591 கிராம ஊராட்சிகளில், பிப்ரவரி 2008 முதல் தொடங்கப்பட்டுள்ளது. திட்ட செயலாக்கத்தின் இறுதி கட்டமான நான்காம் கட்டம், ஜூலை 2008 முதல் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டத் தொடக்கம் முதல் 31.03.2008 வரை இத்திட்டத்தின் செலவினம் ரூ.51.13 கோடியாகும்.

அட்டவணை – 10

2007–08 ஆம் ஆண்டிற்கான நிதி சாதனை

(ரூபாய் இலட்சத்தில்)

| மானியத்தின் பெயர் | 2007–08 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
|---|---|---|
| வாழ்ந்து காட்டுவோம் திட்டம் | 9076.03 | 3750.00 |

## இயல் 9

## சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

கடந்த **26.12.04–ல்** தமிழக கடற்கரை பகுதிகளை சுனாமி தாக்கியதால் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு மனித உயிர்கள், வாழ்வாதாரம் உடைமைகள் மற்றும் உள் கட்டமைப்புகளுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளப் பெறச் செய்தல், பொது உள் கட்டமைப்பு வசதிகளை சீரமைத்தல், வீடுகள் கட்டுதல் போன்ற நிவாரணப் பணிகள் தமிழக அரசின் முயற்சியால் ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி மற்றும் மத்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட வரையறுக்கப்பட்ட நோக்கங்களை விரைவில் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் சுனாமி திட்ட செயலாக்க அலகு நிறுவப்பட்டது.

**திட்ட செயலாக்கம்**

திட்டங்களின் நோக்கங்கள் பிரிவு வாரியான ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்ட நிதி மற்றும் கடந்த ஓராண்டில் திட்ட செயலாக்க அலகு மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினம் போன்ற விபரங்கள் பின்வருமாறு கொடுக்கப்படுகின்றன:

### 1.ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடனான சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP)

சுனாமி பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில், குறிப்பாக ஏழைகளின் வாழ்வாதாரத்தை மீளப் பெறுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல், வறுமையை ஒழித்தல் ஆகிய அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டம் **12** கடலோர மாவட்டங்களான காஞ்சீபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் பயனடையத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடனான சுனாமி அவசரகால உதவி திட்டம் (TEAP) சுனாமி திட்டச் செயலாக்க அலகினால் **307.29** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கால அளவு 6.04.2005 அன்று தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் பிரிவு வாரியான நிதி ஒதுக்கீடு, நிதி விடுவிக்கப்பட்டது மற்றும் செலவினங்களின், முன்னேற்றம் அட்டவணை 11–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை –11

சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP) – 2007–08 ஆம் ஆண்டு நிதிநிலை முன்னேற்றம்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | உட்கூறுகள் | நிதி ஒதுக்கீடு | 13.05.06 வரை செலவு | 14.05.06 முதல் 31.03.08 வரை செலவு |
|---|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரம் | 190.10 | 2.88 | 165.16 |
| 2. | ஊரக உள்கட்டமைப்பு | | | |
| | அ. சாலைகள், வடிகால்கள் மற்றும் சுகாதாரம் | 99.49 | 2.07 | 70.08 |
| | ஆ. பொதுக்கட்டிடங்கள் | 5.62 | 0 | 1.20 |
| 3. | நிர்வாக செலவினங்கள் | 12.08 | 0 | 10.15 |
| | மொத்தம் | 307.29 | 4.95 | 246.59 |

## 1.1 வாழ்வாதாரம்

### 1.1.1 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

33,547 சுய உதவிக் குழுக்களுக்கு 88.82 கோடி ரூபாய் சுழல்நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

### 1.1.2 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார உதவி

இத்திட்டத்தின் கீழ் 2472 சுய உதவிக் குழுக்களுக்கு 31.55 கோடி ரூபாய் செலவில் பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 1.1.3 உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு உதவி

உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டுக்கென பெருந்திட்டம் ஒன்றை அரசு அமல் படுத்தியது. 34632 ஊனமுற்ற நபர்களுக்கு தலா 10,000/– ரூபாய் வீதம் 34.63 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த உதவி கடலோர வட்டாரங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கு மட்டும் என வரையறுக்கப்படாமல், கடலோர மாவட்டங்களில் உள்ள தகுதியுள்ள அனைத்து உடல் ஊனமுற்றோர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.1.4 திறனாக்க மேம்பாடு

4.39 கோடி ரூபாய் செலவில் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

### 1.2 சாலைப் பணிகள்

முதற்கட்டமாக 488 சாலைப்பணிகள் (533.79 கி.மீ நீளம்) எடுத்துக் கொள்ளப்பட்டு 485 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தப் புள்ளித் தொகை மொத்தம் 69.65 கோடி ரூபாயில், 31.03.2008 முடிய 65.07 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, 123 பணிகள் (165.47 கி.மீ நீளம்) மொத்தம் 24.66 கோடி ரூபாய் ஒப்பந்தப் புள்ளித் தொகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 31.03.08 முடிய 6.15 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

### 1.3 பொதுக் கட்டிடங்கள்

பொதுக்கட்டிடங்கள் கட்டுதல் என்ற உட்கூறின் கீழ், ஊராட்சி அலுவலக கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 208 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 31.03.08 முடிய 1.20 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

### 1.4 சமுதாய உள் கட்டமைப்பு – சிறப்புத் திட்டங்கள்

இச்சிறப்புத் திட்டம் மூலம் பயிற்சி மற்றும் வாழ்வாதாரம் தொடர்புடைய கீழ்க்கண்ட சமுதாய உள் கட்டமைப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:–

I. மகளிர் சுய உதவி குழுக்கள் வளாகம் 10.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டுதல்.
II. காஞ்சீபுரம் மாவட்டம் மாமல்லபுரத்தில் 10.58 கோடி ரூபாய் செலவில் சிற்பப் பூங்கா அமைத்தல்.
III. 93 மீனவச் சங்கக் கூட்டமைப்புகளுக்கு நடைமுறை மூலதனமாக 2.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
IV. கடல் பாதுகாப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் சுமார் 25,000 மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் 1.13 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
V. பால் பொருள் தொழில்கள் மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்திட ஆவின் நிறுவனத்திற்கு 4.06 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.
VI. கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, 51.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் அமைக்கப்பட உள்ளது.
VII. கடலோரப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில் 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.
VIII. கைத்தறி மற்றும் ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு 61.09 இலட்சம் ரூபாய் வழங்கி நாகர்கோவிலில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.5 சுகாதாரம்

இத்திட்ட உட்கூறின் கீழ் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்காக, குறும்படக்காட்சிகள் மூலம் முனைப்பான சுகாதார இயக்கம் நடத்த 5.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சியினால் மத்திய அரசு நிதி உதவியுடன்கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மிட்டருக்குள் அமைந்த பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் மற்றும் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1000 மீட்டர் தொலைவிற்குள் அமைந்த இந்திரா நினைவு குடியிருப்பு போன்ற அரசு நிதியின் கீழ் கட்டப்பட்ட 1.1.2006 அன்று 10 ஆண்டுகள் கடந்த பழமையான வீடுகளை இடித்து புதிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் சுமார் 20000 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் 325 சதுர அடி பரப்பளவுக்கு குறையாமல் சுமார் 2.56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகின்றது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 512 கோடி ரூபாயாகும் இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பெரும்பாலானவை இறுதி செய்யப்பெற்று பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்துடன் ஒரு வீட்டிற்கு 40,000 ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் சுமார் 80 கோடி ரூபாய் செலவில் செய்து தரப்படுகின்றன.

மேலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் வீடுகள் கட்டப்பட்ட இடங்களில், அந்நிறுவனங்களால் செய்யாமல் விடப்பட்ட அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கழிப்பறைகள் ஏற்படுத்துதல், நிலங்களைச் சமன் செய்தல் போன்ற பணிகள் 53.14 கோடி ரூபாய் செலவில் செய்து தரப்பட்டுள்ளன. சில கடலோர மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டாமல் விடப்பட்ட 2,630 வீடுகள் எடுத்து கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேற்காணும் இடங்களில் 10.52 கோடி ரூபாய் செலவில் சிமெண்ட் சாலைகள், தெரு விளக்குகள், பொதுக் கட்டிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

## 3. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டம்

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலான கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறிப்பட்ட சுமார் 22,000 வீடுகளை மீளக் கட்டித் தரவும், மற்றும் அவசர காலங்களில் எளிதாக வெளியேறி

தப்பித்து செல்லத் தேவையான சுமார் 150 கி.மீ நீளமுள்ள வெளியேறும் சாலைகளை அமைக்கவும் அரசு உலக வங்கியுடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

உலக வங்கியுடன் அரசின் வருவாய்த்துறை நடத்தி வரும் பேச்சுவார்த்தை முன்னேற்றத்தில் உள்ளது. மேலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் இறுதி செய்யும் நிலையில் உள்ளன.